SRI LANKA

**இலங்கை கணக்கீட்டுத் தொழிநுட்பவியலாளர்கள் கழகம்**

# மட்டம I பரீட்சை – ஜனவரி 2021

## பரிந்துரைக்கப்பட்ட விடைகளும

# (103) பொருளியல் (ECN)

**இலங்கை கணக்கீட்டுத் தொழிநுட்பவியலாளர்கள் கழகம்**

இல:540, வென் முருத்துவெட்டுவ ஆனந்த நயிமி மாவத்தை,
நாரஹேன்பிட்ட ,கொழும்பு 05
தொலைபேசி இலக்கம் : 011-2-559669

**கல்வி மற்றும் பயிற்சி பிரிவின் வெளியீடு**

**இலங்கை கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர்கள் கழகம்**

# மட்டம் I - ஜனவரி 2021

# (103) பொருளியல்

# பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

(மொத்தம் 40 புள்ளிகள்) **பகுதி - A**

***வினா 01 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்***

**1.1** (2)

**1.2** (3)

**1.3** (3)

**1.4** (4)

**1.5** (4)

**1.6** (1)

**1.7** (2)

**1.8** (1)

**1.9** (1)

**1.10** (2)

**1.11** எல்லைக்கிரயம்

**1.12** சரி

**1.13** தவறு

**1.14** சரி


**1.15** தவறு

**1.16 நிரம்பல் வளையியை இடது பக்கத்திற்கு நகர்த்துகின்ற காரணிகள்**

- தொடர்பு அல்லது இணைப்பு பண்டத்தின் விலையில் ஏற்படும் அதிகரிப்பு
- பண்டத்தின் உற்பத்திற்காக பயன்படுத்தப்படும் உள்ளீட்டு பொருட்களின் விலை உயர்வு
- பண்டத்தின் உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் பழைமையான தொழில்நுட்ப வசதிகள்
- சந்தையில் வழங்குனர்களின் எண்ணிக்கையானது குறைவடைந்து செல்லுதல்
- அரசாங்கத்தினால் உற்பத்தியாளர்கள் மீது திணிக்கப்படும் வரி
- பதிலீட்டு பண்டம் உற்பத்தியினை அரசு நிறுத்துதல்

**1.17 கேள்வி கணிய மாற்றம்.**

குறிப்பிட்ட பொருளின் விலை தவிர்ந்த ஏனைய காரணிகள் மாறாத போது குறிப்பிட்ட பொருளின் விலை மாற்றமடைய அதன் கேள்வித் தொகை மாற்றமடைவது கேள்வித் தொகை மாற்றம் எனப்படும். அதாவது குறித்த பொருளின் விலை குறைதல் அல்லது கூடுதலுக்கேற்ப அதன் கேள்வித் தொகை அதிகரித்தல் அல்லது குறைவடைதல் கேள்வி தொகை மாற்றம் என அழைக்கப்படும். இவ்கேள்வித் தொகை மாற்றத்தின் போது கேள்விக்கோடானது நகர்வடையாமல் கேள்விக்கோட்டின் புள்ளியின் மேல் நோக்கியோ அல்லது கீழ்நோக்கியோ நகரும்.




**1.18 அளவுத்திட்ட விளைவுகளை அதிகரிக்கும் காரணிகள்**

- உற்பத்தி காரணிகளின் விசேட தன்மைகள் அல்லது வடிவம்
- உற்பத்தி காரணிகளின் பிரிபடாதத் தன்மை
- சில செலவுகள் ஒரு தடவை மட்டும் ஏற்படுதல்
- அதி உயர் ரீதியான தொழிற்நுட்ப பயன்பாடு
- தொழிற்பிரிப்பும் சிறப்புத் தேர்ச்சியும்

**1.19 எல்லை வருமானம் என்பதால் கருதப்படுவது**

ஒரு நிறுவனம் தனது உற்பத்திப் பொருளில் ஒரு அலகு பொருளை மேலதிகமாக விற்பனை செய்யும் போது மொத்த வருமானத்தில் ஏற்படும் மாற்றம் எல்லை வருமானம் எனப்படும். எல்லை வருமானத்தினை பின்வருமாறு கணிப்பிடலாம்

$$\text{எல்லை வருமானம்} = \frac{\text{மொத்த வருமானத்தில் ஏற்பட்ட மாற்றம்}}{\text{வெளியீட்டில் ஏற்பட்ட மாற்றம்}}$$

**1.20 அரசாங்கம் சந்தையில் தலையீடு செய்யும் வழிகள்**

1. வரிகள் விதிப்பதன் மூலம்
2. மானியம் வழங்குவதன் மூலம்
3. விலைகட்டுப்பாட்டினை அறிமுகப்படுத்துவதன் மூலம்
4. அதிவுயர் சட்டபூர்வமான விலையை அறிமுகப்படுத்தல்
5. ஆகக்குறைந்த சட்டபூர்வமான விலையை அறிமுகப்படுத்தல்
6. நியாயமான விலைநிர்ணயம்.

***(02 புள்ளிகள் வீதம் , மொத்தம் 40 புள்ளிகள்)***

***பகுதி A முற்றும்.***




aat SRI LANKA

மொத்தம் 40 புள்ளிகள் **பகுதி - B**

## *வினா 02 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்*

**அத்தியாயம் 01 – வணிக சூழல் தொடர்பான பொருளாதார கருத்துக்கள் மற்றும் அமைப்புக்கள்**

**(a) பிரதான வளங்கள் / உற்பத்தி காரணிகள்**

நிலம்

உழைப்பு

மூலதனமி

முயற்சியாண்மை

*(02 புள்ளிகள்)*

**(b) சந்தை பொருளாதாரத்தின் பண்புகள்**

- அடிப்படை பொருளாதார பிரச்சினைகள் விலை பொறிமுறை அடிப்படையில் தீர்க்கப்படும்.
- சொத்துடமை தனியார் மயமானது
- தனியார் முயற்சியாண்மை காணப்படல்
- அரசாங்கத்தின் தலையீடு குறைவு
- போட்டி சந்தைமுறை காணப்படல்
- சுதந்திர தெரிவு முறை காணப்படல்
- நுகர்வோர் இறைமை காணப்படல்

*(04 புள்ளிகள்)*

**(c)**

**(i) தெரிவு எனப்படுவது**

அருமையானதும் மாற்றுப்பயன்பாடுகளைக் கொண்டதுமான வளங்களை பயன்படுத்தி வரையறையற்ற சமூகத்தின் விருப்பங்களை பூர்த்திசெய்ய முற்படும் போது ஓவ்வொரு சமூகமும் எதிர்நோக்கும் பிரச்சனைகள் தெரிவு எனும் பொருளாதார பிரச்சனையாகும். அதாவது தெரிவு என்பது மாற்றுபயன்பாடுடைய வளங்களின் அடுத்த அதிசிறந்த தெரிவாகும்.

*(02 புள்ளிகள்)*

**(ii) உற்பத்தி சாத்திய வளையின் எடுகோள்கள்**

- பொருளாதாரத்தில் உள்ள வளங்களின் அளவு நிலையானது
- வளங்களை காரணமாகவும் உச்ச செயற்றிறனுடனும் உற்பத்தியில் பயன்படுத்தப்படுகின்றன.
- இரண்டு வகையான பொருட்கள் மட்டும் உற்பத்தியில் பயன்படுத்தப்படுகின்றது
- கருதப்படும் காலத்தில் தொழில்நுட்ப மாற்றங்கள் ஏதும் இல்லை

*(02 புள்ளிகள்)*
*(மொத்தம் 10 புள்ளிகள்)*

## *வினா 03 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்*

**அத்தியாயம் 02 – கேள்வி , நிரம்பல், சந்தை சமநிலை, மற்றும் அரசு தலையிடுதல்**

**(a) சந்தை சமநிலையில் Qd=Qs**

Qd = 3,600 – 7P
Qs = -200 + P
3,600- 7P = -200 + P

3,800 = 8P
3,800/8= P
P = 475
**<u>சந்தை சமநிலை விலை – ரூபா. 475/-</u>**

**விலை = 475/- கேள்வி தொகை சமன்பாட்டில் பிரதீடுசெய்தல்**

Qd = 3,600 - 7P
Qd = 3600 - (7 x 475)
Qd = 3,600 – 3,325
**<u>Qd = 275</u>**
**<u>சந்தை சமநிலையில் கேள்வித்தொகை – 275 அலகுகள்</u>**

***(04 புள்ளிகள்)***

**(b)**

**அத்தியாயம் 03 – உற்பத்தி நடைமுறையின் நடத்தை மற்றும் சந்தை அமைப்புக்கள்.**

**குறுங்கால உற்பத்தி** என்பது பொருட்கள் மற்றும் சேவைகள் உற்பத்தி நடைமுறையின் போது உற்பத்தி செயற்பாட்டில் உள்ளீடாக நிலையான காரணிகள் மாறும் காரணிகள் பயன்படுத்தப்படுகின்றன. இங்கு உற்பத்தி கால அளவின் போது நிலையான காரணிகளை மாற்றிக் கொள்ள முடியாமல் காணப்படும். குறுங்காலத்தின் உற்பத்தியானது நிலையான மற்றும் மாறும் உற்பத்தி காரணிகளை உள்ளடக்கியவையாகவும், மொத்த கிரயமானது நிலையான கிரயம் மற்றும் மாறும் கிரயம் என்பனவற்றினை உள்ளடக்கியும் காணப்படும். குறுங்காலத்தில் ஆகக் குறைந்தது ஒரு காரணி உள்ளீட்டினையாவது மாற்றிக் கொள்ள முடியாத காலம் ஆகும். குறுங்காலத்தில் செலவு மற்றும் உற்பத்தி நடத்தையானது குறைந்து செல்லும் எல்லை விளைவு விதியின் செயற்பாட்டினை அடிப்படையினை கொண்டதாக அமையும்.

குறுங்காலத்தில் ஆகக் குறைந்தது ஒரு நிலையான காரணியாவது காணப்படும். குறுங்காலத்தில் உற்பத்தியை அதிகரிக்க விரும்பினால் மாறும் காரணிகளை அதிகரிப்பதன் மூலமே உற்பத்தியாளன் அதனை மேற்கொள்ள முடியும்.

**நீண்ட கால உற்பத்தி** என்பது பொருட்கள் மற்றும் சேவைகள் உற்பத்தி நடைமுறையின் போது உற்பத்தி செயற்பாட்டில் உள்ளீடாக மாறும் காரணிகள் மட்டும் பயன்படுத்தப்படுகின்றன. இங்கு உற்பத்தி கால அளவின் போது நிலையான காரணிகளை மாற்றிக் கொள்ள கூடிய நிலை காணப்படும். நீண்ட காலத்தின் உற்பத்தியானது மாறும் உற்பத்தி காரணிகளை உள்ளடக்கியவையாகவும், மொத்த கிரயமானது மாறும் செலவினை மட்டும் உள்ளடக்கியதாக காணப்படும். நீண்டகாலத்தில் செலவு மற்றும் உற்பத்தி நடத்தையானது அளவுதிட்ட எல்லை விதியின் செயற்பாட்டினை அடிப்படையினை கொண்டதாக அமையும். என்பது உற்பத்தி செயற்பாட்டின் போது உற்பத்தியில் ஈடுபடுத்தப்படும் எல்லாக் காரணிகளின் அளவினையும் மாற்றிக்கொள்ள கூடிய காலம் ஆகும். எனவே நீண்ட கால உற்பத்தி செயற்பாட்டில் எல்லாக் காரணிகளும்

மாறும் காரணிகளாகவே காணப்படும். நீண்ட கால உற்பத்தி முறையில் நிலையான காரணிகளை மாறும் காரணிகளாக மாற்றுவதற்கு காலம் முக்கியமான ஒன்றாகும்.

*(04 புள்ளிகள்)*

(C)

**அத்தியாயம் 03 – உற்பத்தி நடைமுறையின் நடத்தை மற்றும் சந்தை அமைப்புக்கள்.**

**தனியுரிமை போட்டிச்சந்தையின் பண்புகள்**

- சந்தையில் அதிக எண்ணிக்கையான நிறுவனங்கள் அல்லது வழங்குநர்கள் காணப்படுதல்
- ஒவ்வொரு நிறுவனமும் உற்பத்தி செய்யும் பொருட்கள் வேறாக்கம் செய்யப்பட்டிருத்தல்
- சந்தையில் உட்பிரவேசிக்கவும் சந்தையை விட்டு வெளியேறவும் எவ்வித தடைகளும் காணப்படமாட்டாது
- நிறுவனம் விலைகட்டுப்பாட்டினை அமைப்போனாக காணப்படுதல்
- போட்டி விளம்பரங்கள் அதிகமாக காணப்படும்
- தனியுரிமை போட்டி நிறுவனங்கள் குறுங்காலத்தில் சாதாரண அசாதாரண இலாபம் நட்டம் ஆகியவற்றினை அடையும். ஆனால் நீண்ட காலத்தில் சாதாரண இலாபத்தினை மட்டுமே உழைக்கும்.
- உற்பத்தி தொழிற்பாட்டில் உற்பத்தி காரணிகள் ஒரு நிறுவனத்திலிருந்து மற்றொரு துறைக்கு நகருவதில்
- எவ்வித தடைகளும் இல்லை.
- நிறுவனத்தின் கேள்வி கோடானது மேலிருந்து கீழாக இடமிருந்து வலமாக செல்லும் சாதாரண கேள்வி கோடாக காணப்படும். உற்பத்தி செய்யும் பொருட்கள் நெருங்கிய பிரதியீட்டுப் பொருட்களாக இருப்பதால் தனியுரிமைப்போட்டி நிறுவனத்தின் கேள்வி கோடு ஓரளவு நெகிழ்ச்சியுள்ள கெள்விக் கோடாக காணப்படும்.

*(04 புள்ளிகள்)*
*(மொத்தம் 10 புள்ளிகள்)*

**அத்தியாயம் 05 – நிதியிடல் முறைமை, பணம் மற்றும் பொதுவிலைமட்டம்**

(a) **வர்த்தக வங்கியின் தொழிற்பாடுகள்**

- வைப்புகளை ஏற்றல்
- கடன்களை வழங்கல்
- காசோலை மற்றும் உண்டியல் சேகரிப்பு
- நாணயக்கடிதங்களை வழங்கல்
- குறிப்புரைக் கடிதங்களை வழங்குதல்
- பயணிகளின் காசோலைகளை வழங்குதல்
- பாதுகாப்ப பெட்டக வசதி
- இலத்திரனியல் நிதி பரிமாற்றம்
- தானியங்கி டெல்லர் இயந்திரங்கள்
- வரவு அட்டைகள் மற்றும் கடன்அட்டைகள் வழங்குதல்

*(04 புள்ளிகள்)*

aat SRI LANKA

**(b) இலாபத்தன்மை மற்றும் திரவதன்மையிடையிலான தொடர்பு**

ஒரு சொத்தின் திரவதன்மை அதிகமாக இருப்பதால் அதன் இலாபத்தன்மை குறைவாக இருக்கும் என்று பொதுவாககூறப்படுகின்றது. வணிக வங்கிகள் பிறரிடமிருந்து பெற்றுக்கொண்ட பணத்தைக் கொண்டே தமது வணிகத்தை நடாத்துவதால் , வணிக வங்கிகள் அவர்களுக்கு வட்டி செலுத்த வேண்டும். வணிக வங்கிகள் தங்கள் கடன் தொழிற்பாடுகள் மற்றும் நீண்ட கால முதலீடுகளை அதிகபட்ச நிலைக்கு நீட்டிக்க வேண்டியளவு இலாபங்களை ஈட்டாவிட்டால் அவை நீடித்துநிற்கவும் வளர்ச்சி அடையவும் முடியாது. மறு புறமாக , வங்கிகளின் நீடித்த வாழ்வுத்தன்மை அவற்றின் மீது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையைப் பொறுத்தது ஆகும். இது வாடிக்கையாளர் தேவைகளை பூர்த்தி செய்ய வங்கி போதுமான திரவ நிதியை வைத்திருக்க வங்கிகளுக்கு அவசியமான முறைமை காணப்படுவதைத் தேவைப்படுத்தும். அதன்படி ஒரு வங்கி திரவதன்மையை இழக்கும் கிரயத்தில் இலாபத்தை உயர்த்த முடியும். மேலும் அது இலாபத்தினை ஈட்டுவதற்கான சந்தர்ப்ப செலவாக திரவதன்மையைப் பேண முடியும் இதன்படி இரண்டுக்கும் இடையில் ஓர் சமநிலையை நிலைநிறுத்துவது சவால்மிக்கதாகும்.

*(04 புள்ளிகள்)*

**(C) பணவீக்கத்துக்கான காரணங்கள்**

1. கேள்வி இழுப்பு பணவீக்கம்
2. செலவுத் தள்ளுகைப் பணவீக்கம்

*(02 புள்ளிகள்)*
*(மொத்தம் 10 புள்ளிகள்)*

aat SRI LANKA

## ***வினா 05 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்***

| **அத்தியாயம் 06 – சர்வதேச வர்த்தகம் மற்றும் நாணயமாற்று சந்தையும்** |
|---|

**(a) சர்வதேச வர்த்தகத்தின் பிரதிகூலங்கள்**

- நாட்டிற்கு தேவையற்ற அல்லது தீங்கினை ஏற்படுத்தும் பொருட்களின் இறக்குமதி கூடுதல்.
  உதாரணமாக வெளிநாட்டு வியாபாரம் மூலம் மக்களின் சுகாதாரத்தினை பாதிக்கும் சிகரட் போதை பொருள் போன்றன உள்நாட்டிற்கு இறக்குமதி என்னும் போர்வையில் உள்வருதல்.
- மிகை சிறப்புதேர்ச்சியானது ஒரு நாட்டுக்கு இடரினை ஏற்படுத்தலாம்.
- ஒரு நாடு தன்னுடைய தேவைக்கு மற்றைய நாட்டினை பெரும்பாலும் தங்கியிருக்கும் நிலை ஏற்படல்
- ஒரு நாடு இன்னொரு நாட்டின் செலவினத்தில் ஆதாயம் பெறுதல்
- உள்நாட்டு நிறுவனங்களின் தரமான உற்பத்திகள், வெளிநாட்டு இறக்குமதிளின் போட்டி தன்மையை மற்றும் குவித்தல் தன்மையை எதிர்கொள்ள முடியாமல் போராடுதல் மற்றும் குறைந்த விலையில் தரம் குறைந்த பொருட்கள் உள்நாட்டில் ஊடுருவல். இவ் இறக்குமதிகள் காலப்போக்கில் உள்நாட்டில் வேலையின்மை பிரச்சினைக்கு வழிவகுத்தல்.

*(02 புள்ளிகள்)*

**(b) பாதுகாப்புவாதத்தின் அனுகூலங்கள்**

- தேசிய பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் வழங்கல்.
- உள்நாட்டு உற்பத்தியாளர்களை வெளிநாட்டு போட்டி பொருட்கள் மற்றும் நிறுவங்களிடமிருந்து பாதுகாத்தல்
- அதிகளவு உள்நாட்டு உற்பத்தி வளங்களை பயன்படுத்துவதற்கு ஊக்குவித்தல் நிறுவனங்களை பல்வகைப்படுத்தல்
- வேலைவாய்ப்புகளை அதிகரிப்பது மற்றும் தந்திரோபாய ரீதியில் உள்நாட்டு தொழிற்துறைகளை பாதுகாக்க உதவுதல்
- பாதகமான இறக்குமதிகளை தடுத்தல்.
- பாதகமான சென்மதி நிலுவை பற்றாக்குறையை சீர்செய்தல்
- இறக்குமதி வரிகளை விதிப்பதன் மூலம் வெளிநாட்டு நிறுவனங்கள் குறைந்த விலையில் உள்நாட்டில் பொருட்கள் குவித்தலை தடை செய்தல்

***(02 புள்ளிகள்)***

**(c) இலங்கை ரூபாயின் பெறுமதியிறக்கம் காரணமாக இலங்கை பொருளாதாரத்தில் ஏற்படக்கூடிய விளைவுகள்**

- **இறக்குமதி பொருட்களின் விலை அதிகரிக்கும்** - டொலருக்கு எதிரான இலங்கை ரூபாயின் பெறுமதி இறக்கம் ஏற்படுவதனால் இறக்குமதியாளர்கள் பிரதிகூலங்கள் ஏற்படும். இலங்கை நாணயபெறுமதி தேய்வு காரணமாக இறக்குமதியாளர்களுக்கு இறக்குமதி செலவு அதிகரிக்கும் மேலும் இவ் செலவானது நுகர்வோர் மீது திணிக்கப்படும். இதன் விளைவு சந்தையில் உள்ள பொருட்களின் விலையதிகரிப்பு ஏற்படும்.
- **ஏற்றுமதி வருமானம் அதிகரிக்கும்** - அதாவது டொலருக்கு எதிரான இலங்கை ரூபாயின் பெறுமதி இறக்கம் ஏற்படுவதனால் போட்டி பொருட்கள் மற்றும் மலிவான வெளிநாட்டு ஏற்றுமதியாளருக்கு ஏற்றுமதி செய்வதால் ஏற்றுமதி கேள்வி அதிகரித்து ஏற்றுமதி வருவாய் அதிகரிக்கும்.
- **பணவீக்கம் அதிகரிக்கும்** - டொலருக்கு எதிரான இலங்கை ரூபாயின் பெறுமதி இறக்கம் ஏற்படுவதனால், உள்நாட்டு உற்பத்திக்கான உள்ளீடுகள் வெளிநாட்டு இறக்குமதியில் தங்கியிருப்பதனால் உள்நாட்டில் பணவீக்கம் நிலை அதிகரிக்கும்.
- **சென்மதி நிலுவை பற்றாக்குறை அதிகரிக்கும்** - ஏற்றுமதி அதிகரித்து காணப்பட்டாலும் ஏற்றுமதி வருமானம் இறக்குமதி செலவினை விட குறைவாக காணப்படும். இங்கு இறக்குமதி பண்டங்களின் விலை அதிகரிக்கும் போது அது சென்மதி நிலுவை பற்றாக்குறையினை அதிகரிக்கும். இதனால் அரசாங்கம் கடன்களை பெற்று சென்மதி நிலுவை பற்றாக்குறையினை சீர்செய்ய வேண்டிய நிலைமை ஏற்படும்.

aat SRI LANKA

- **அரசு வெளிநாட்டு கடன்களுக்கு அதிகளவு வட்டியினை செலுத்த வேண்டி ஏற்படும்**. - டொலருக்கு எதிரான இலங்கை ரூபாயின் பெறுமதி இறக்கம் ஏற்படுவதனால், இலங்கை பெற்றுக்கொண்ட வெளிநாட்டு கடன்களுக்கு அதிகளவு வட்டியினை செலுத்த வேண்டிய நிலை ஏற்படும். இதனால் அரசாங்கத்தின் மூலதன முடக்கம் ஏற்பட்டு, அதிகளவு கடன்படும் நிலை ஏற்படுவதோடு அதிகளவு வட்டியினை செலுத்த வேண்டிய நிலையை அரசு எதிர்நோக்கும்.
- **வெளிநாட்டு நேரடி முதலீடு குறைவடையும்** - டொலருக்கு எதிரான இலங்கை ரூபாயின் பெறுமதி இறக்கம் ஏற்படுவதனால், வெளிநாட்டவர் இலங்கையில் முதலீடு செய்வதற்கு விரும்பமாட்டார்கள். இதனால் அரசின் பொருளாதார அபிவிருத்தி பாதிப்படையும்.
- **மக்களின் வாழ்க்கை தரம் வீழ்ச்சியடையும்-** டொலருக்கு எதிரான இலங்கை ரூபாயின் பெறுமதி இறக்கம் ஏற்படுவதனால், மக்களின் வாழ்க்கை தரத்திற்கான செலவு அதிகரிப்பதால் இலங்கை மக்களின் வாழ்க்கை தரம் வீழ்ச்சியடைவதுடன். இலங்கை நாணயத்தின் மெய்பெறுமதி வீழ்ச்சியடையும்.

*(02 புள்ளிகள்)*
*(மொத்தம் 10 புள்ளிகள்)*

| *பகுதி B முற்றும்.* |
|---|

SRI LANKA

## *வினா 05 இற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்*

**அத்தியாயம் 04 – தேசிய கணக்கீடு மற்றும் அரச தலையீடுகளும்**

**(A)**

**(a) <u>மொத்த உள்நாட்டு செலவீனம் (GDE) சந்தை விலையில்</u>** **(மில்லியன் -M)**

| | | |
|---|---|---|
| தனியார் நுகர்வு செலவீனம் | = | 600 |
| அரசாங்க நுகர்வு செலவீனம் | = | 500 |
| மொத்த உள்நாட்டு மூலதன உருவாக்கம் | = | 400 |
| தொக்கு மாற்றங்கல் | = | 200 |
| **மொத்த உள்நாட்டு செலவீனம் (GDE) சந்தை விலையில்** | = | **<u>1,700 M</u>** |

*(05 புள்ளிகள்)*

**(டி) <u>மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) சந்தை விலையில்</u>** **(மில்லியன் -M)**

| | | |
|---|---|---|
| மொத்த உள்நாட்டு செலவீனம் (புனுநு) சந்தை விலையில் | = | 1,700 |
| கூட்டுக: ஏற்றுமதி | = | 400 |
| கழிக்க : இறக்குமதி | = | ( 250) |
| **மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) சந்தை விலையில்** | = | **<u>1,850 M</u>** |

*(03 புள்ளிகள்)*

**(உ) <u>மொத்த தேசிய வருமானம் (GNI) சந்தை விலையில்</u>** **(மில்லியன் -M)**

| | | |
|---|---|---|
| மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) சந்தை விலையில் | = | 1,850 |
| வெளிநாட்டிலிருந்தான நிகர காரணி வருமானம் | = | (100) |
| **மொத்த தேசிய வருமானம் (GNI) சந்தை விலையில்** | = | **<u>1,750 M</u>** |

*(02 புள்ளிகள்)*

**(B)**

**(a) நிதிக் கொள்கை ( The Fiscal Policy )**

இவ் கொள்கையானது அரசாங்கத்தால் மாற்றங்கள் ஏற்படுத்துவற்காக உருவாக்கப்பட்டதும் மற்றும் அரசாங்கத்தின் செலவீனங்கள் , வரிகள், மற்றும் கடன்களை அளவீடு செய்வதன் மூலம் பேரின பொருளாதார நோக்கங்களை அடைவதாகும். இங்கு முக்கிய மாறும் மாறிகளாக காணப்படுபவை அரசாங்க செலவீனங்களும் மற்றும் அரசாங்க வருமானங்களும் ஆகும். இவ் நிதி கொள்கையானது சுருக்கக் கொள்கை, விரிவாக்கக் கொள்கை அல்லது நடுநிலைக் கொள்கை வடிவில் வகுக்க முடியும்.

**நாணயக் கொள்கை (Monetary Policy)**

பொருளாதாரத்தின் வளர்ச்சி மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மை நோக்கிய குறிகோள்களை அடைவதற்கு பணவழங்கல், பணத்திற்கான நிரம்பல் மற்றும் பணத்திற்கான கிரயம் (வட்டி வீதம்) போன்றனவற்றினை கட்டுப்படுத்தும் செயன்முறை ஆகும்.

*(04 புள்ளிகள்)*

aat SRI LANKA

**(b) பாதீட்டு பற்றாக்குறை எனப்படுவது** அரசாங்கத்தின் செலவீனங்கள், அரச வருமானத்தினை விட உயர்வாக காணப்படுவது ஆகும்.

உதாரணம் :-

பாதீட்டு பற்றாக்குறை = அரசாங்க வருமானம் - அரசாங்க செலவீனங்கள்

= ரூபா.300 மில்லியன் - ரூபா.350 மில்லியன்

= (ரூபா.50 மில்லியன்)

*(02 புள்ளிகள்)*

**(C)**

**(a) சந்தை பொருளாதாரத்தில் வினைதிறனற்ற வகையிலான வள ஒதுக்கீட்டைத் தடுப்பதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள்.**

- நலன்புரி பொருட்களின் நுகர்வுக்கு ஊக்கமளித்தல்
- பொது பொருட்களின் வழங்கல்
- போலி பொது பொருட்களின் வழங்கல்
- தீயவிளைவுள்ள பொருட்களின் விநியோகத்தினை கட்டுப்படுத்துதல்

*(02 புள்ளிகள்)*

**(b) அரசாங்கத்தின் தோல்விக்கான காரணங்கள்**

- அரசியல் சுயநலம் - பொது அதிகாரிகளின் தனிப்பட்ட நலன்களுக்கான நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் அளித்தல்
- நிர்வாக செலவீனங்களின் அதிகரிப்பு- விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை அமுல்படுத்துவது போன்ற அரசாங்க நடவடிக்கைகளுக்கு அதிக செலவு செய்தல்
- அரசாங்க தலையீட்டினை தவிர்த்தல் - சில தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள் அரசாங்க விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளிலிருந்து மறைக்க முயற்சிப்பது.
- அரசாங்க நடவடிக்கைகளில் உறுதித்தன்மை – மாறும் சூழலுக்கு ஏற்ப அரசாங்க அடிப்படையிலான கொள்கைகளை மாற்றுவதில் தோல்வி, முக்கிய பலவீனமாக கருதப்படுகின்றது.

*(02 புள்ளிகள்)*
*(மொத்தம் 20 புள்ளிகள்)*

*பகுதி **C** முற்றும்.*

aat SRI LANKA

***Notice:***

These answers compiled and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of material for AAT students.
These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the "Only" answers, or, for that matter even as "Model Answers". The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designs especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

*© 2021 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka). All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*